

**Long-Term Care Home Update** | *Community Newsletter*

Lakeridge Health

நீண்ட கால பராமரிப்பு இல்ல அண்மைய தகவல்கள் -
சமூக செய்திக் கடிதம்
**செப்ரெம்பர் 2021**

## முன்னேற்றம் மிக்க ஓர் ஓய்வற்ற மாதம்

Ajax Pickering Hospital மருத்துவமனையில் தற்போது கட்டியெழுப்பப்பட்டு வரும் புதிய நீண்ட கால பராமரிப்பு இல்லத்தின் பணி, ஒன்பது மாத காலத்தை எல்லையை எட்டியுள்ளதுடன், அதன் முன்னேற்றம் விரைவான வேகத்தில் தொடர்கிறது. கட்டுமானக் குழுவினர் கட்டடத்தை வசதியான இடமாகவும், எதிர்காலக் குடியிருப்பாளர்கள், குடும்பங்கள் மற்றும் குழு உறுப்பினர்களுக்கான பாதுகாப்பான வீடாகவும், மாற்றுவதைத் தொடர்வதால் செப்ரெம்பர் பரபரப்பான மாதமாக உள்ளது.

வீட்டின் கட்டமைப்பு இப்போது நிறைவடைந்துள்ள நிலையில், மேலும் நாங்கள் எங்கள் கவனத்தை உள் மற்றும் வெளிப்புறத் திட்டங்கள் பூர்த்தியாக்கல்களில் திசை திருப்புகிறோம். எடுத்துக்காட்டாக, மின்தூக்கி நிறுவுதல் இந்த மாதம் தொடங்கியது, மற்றும் குழுவினர் வீட்டின் கூரையை நிறுவுவதையும், வெளிப்புறச் சாலை வலையமைப்பில் உள்ள சில பாதையோரத் தடைகளில் கொங்கிரீற் ஊற்றுவதையும் தொடர்கின்றனர்.

வெளிப்புற சட்டப் பனல் நிறுவும் பணியும் நடந்து வருகின்றதுடன், இந்த இலையுதிர்காலத்தில் அது முடிக்கப்பட உள்ளது. இந்தப் பனல் வடிவமைப்பு, கட்டடத்தைப் பெரும்பாலும் ஒரு வீட்டைப் போலத் தோற்றமளிக்கச் செய்யும் என்பதால், இது ஒரு உற்சாகமான முன்செல் முயற்சியாகும்.

இந்த வீட்டின் நம்பமுடியாத முன்னேற்றம், ஒன்ராறியோ அரசாங்கத்தின் துரிதப்படுத்தப்பட்ட முனோடி மாதிரித் திட்டத்தால் பெருமளவில் சாத்தியமாகிறது. மாகாண அரசாங்கம், PCL கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு ஒன்ராறியோவுடன் இணைந்து, புதிய நீண்ட கால வீடு, பாரம்பரிய கட்டுமானத்தை விட, விரைவில் முடிக்கப்படும். ஒருங்கிணைந்த தொகுதிக் கட்டுமான அணுகுமுறை, நேரத் திட்டல் அட்டவணை, தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள், விரைவான உழைப்புக் கொள்முதல் மற்றும் மருத்துவமனை நிலங்களின் பயன்பாடு ஆகியவற்றிற்கு நன்றி. 2022ன் தொடக்கத்தில் கட்டி முடிக்கப்பட்டதும் இந்த Durhum பிராந்தியத்திற்கு 320 நீண்ட கால பராமரிப்புப் படுக்கைகளைக் கொண்டுவந்து நவீன, அதிநவீன, செழுமைமிக்க ஒரு சொந்த வீடு என அழைக்கப்படம் இல்லத்தை முதியோர்களுக்கு இது வழங்கும்.



*A look at the home's roof on September 26, 2021*

## ஒரு முக்கிய "வெற்றிகரமாக நிறைவு செய்துவைக்கும்" நிகழ்வு

ஆகஸ்ட் 27இல், நீண்ட காலப் பராமரிப்பு இல்லத்தின் ஆறாவது மற்றும் இறுதித் தளம் நிறைவடைந்ததைக் கொண்டாடுவதற்காக Lakeridge Health ஒரு "வெற்றிகரமாக நிறைவு விழாவை நடத்தியது. "வெற்றிகரமாக முடித்துவைக்கும்" நிகழ்வு என்பது, ஒரு கட்டடத்தின் மிக உயர் புள்ளிநிலை எட்டப்பட்டுள்ளதனைக் குறிக்கும் கட்டட மனையிடங்களின் ஒரு பாரம்பரியமாகும்.

இச்சாதனையைக் கொண்டாடுவதனையிட்டு, கௌரவ, நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சரும், Ajaxன் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான Rod Phillips, கௌரவ நிதியமைச்சரும், Pickering - Uxbridge மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான Peter Bethlenfalvy Lakeridge Health அமைப்புடனான தலைவர்களுடன் இணைந்து செயற்பட்ட, Whitby மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் Lorene Coe மற்றும் சபைத் தலைவர் Sharon Cochran ஆகியோருக்கும், Infrastucture Ontario, PCL Construction நிறுவனங்களுக்கும் ஒரு மிகப்பெரும் நன்றி! இந்த நிகழ்வு Lakeridge Health, அதன் பங்காளிகள், குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் முழு Durham பிராந்தியத்திற்கும் ஒரு முக்கியமான மைல் கல் நிகழ்வாக உள்ளது. இது ஒன்ராறியோ, மிகவும் தேவைப்பட்ட 30,000 புதிய நீண்டகால பராமரிப்புப் படுக்கைகளை மாகாணத்திற்கும் 320 புதிய படுக்கைகளை Durhamஇல் உள்ள முதியவர்களுக்கு வழங்குவதில் ஒருபடி அண்மிக்கின்றது என்பதைக் குறிக்கின்றது.



அமைச்சர் Phillips, இந்த இல்லத்தில் பங்களித்துள்ள நூற்றுக் கணக்கான கட்டுமானப் பணியாளர்களை அங்கீகரித்து நினைவுகூர, ஒரு தலைக்கவசத்தில் கையொப்பம் இடுகிறார். Lakeridge Health தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமான Cynthia Davis அதனைப் பார்வையிடுகிறார்.



இடமிருந்து வலமாக- *Todd Craigen, President, Eastern Canada, PCL Constructors Canada Inc.; Sharon Cochran, Chair, Board of Trustees, Lakeridge Health; Lorne Coe, MPP, Whitby; Peter Bethlenfalvy, Minister of Finance; Rod Phillips, Minister of Long-Term Care; and Cynthia Davis, President and CEO, Lakeridge Health at the Topping Off ceremony in front of the long-term care home at Ajax Pickering Hospital.* AjaxPickering Hospitalஇலுள்ள இந்த நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தின் முன் நிகழ்ந்த பூர்த்திசெய் நிகழ்வில்.

## செய்திகளில் புதிய நீண்ட கால பராமரிப்பு இல்லம்

வெற்றிகரமாக நிறைவு செய்த நிகழ்வை Daily Construction News பத்திரிகையில் *Topping off ceremony held at Ajax Pickering Hospital* என்னும் தலைப்பில் பிரசுரித்துள்ளது.

நீண்ட கால பராமரிப்பு இல்லத்தின் விரைவான முன்னேற்றம் *Health 180 with Carion Fenn* என்ற இந்த சமீபத்திய காட்சிப்படுத்தப்பட்டது. கௌரவ நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சரும், Ajaxஇன் MPPயுமான Rod Phillips, Lakeridge Health தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான Cynthia Davis, மூலதன திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு சிரேஷ்ட இயக்குனர் Mark Murphy ஆகிய அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இந்த இலையுதிர்காலத்தில் இடம்பெறவுள்ள வேலைகள்

இலையுதிர்காலத்தை எதிர்நோக்கும்போது, வீட்டின் நிரந்தர சக்தி இயக்கமடையும், வீட்டின் தரையையும் நிறுவுதல் தொடங்கும், மேலும் உட்புற சுவர்கள் வண்ணப்பூச்சு பூசப்படும். தெற்கு கிரேன் அக்டோபர் மாதம் வரை தொடர்ந்து பயன்படுத்தப்படும். பின்னர் அது களத்தில் இருந்து அகற்றப்படும்.

வீட்டின் உள்வடிவம் சீராக்கப்பட்டு, உட்புற வேலைகள் வளர்ச்சியடையும்போது, Lakeridge Healthஇல் உள்ள குழு, சமூகத்திற்கு செய்திகளைத் தொடர்ந்து இற்றைப்படுத்தி வழங்கும்.

### நீண்ட காலப் பராமரிப்புத் தகவல் இற்றைப்படுத்தல்களுக்கு, எங்கள் குடியிருப்பாளர் மின்னஞ்சல் பட்டியலில் சேருங்கள்.

உங்கள் மின்னஞ்சலின் இன்பாக்ஸில் நேரடியாக இற்றைப்படுத்தல்களைப் பெற விரும்புகிறீர்களா? உங்கள் பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியை, AjaxLTC@lh.ca முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் எங்கள் மின்னஞ்சல் பட்டியலில் சேர்ந்துகொள்ளுங்கள்.

எங்கள் lakeridgehealth.on.ca வலைத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம், தகவல்கள் இற்றைவரைப்படுத்தப்பட்ட நிலையில் நீங்கள் இருக்க முடியும். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கரிசனைகள் இருந்தால், தயவுசெய்து 905-576 -8711 ext. 34167ஐ அழையுங்கள் அல்லது AjaxLTC@lh.ca முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

நீங்கள் எங்களை ருவிற்றரிலும் முகநூலிலும் (Twitter, Facebook) கண்டடைந்து, பின்தொடரலாம்!